[திரு. க. அன்பழகன்] [1973 பிப்ரவரி 12

மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் டாக்டர் ஜெயகுமார், 25—1—1973 அன்று காலையில் சிகிச்சைக்குப் பிறகு ஒரு நோயாளியை மருத்துவ மனையிலிருந்து விடுவித்து வெளியே அனுப்பும்படி பணித்தார். அந்நோயாளி மருத்துவ மனையில் கடைநிலை ஊழியராகப் பணி புரிபவர் ஆவர். அன்று மாலை மருத்துவர் வார்டுக்கு வந்த சமயத்தில் நோயாளி வெளியே அனுப்பப்படாமல் வார்டிலேயே இருப்பதைக் கண்டார். எனவே, உடனடியாக அந்நோயாளியை அனுப்பும்படி மருத்துவர் பணித்தார். இதனால் கடைநிலை ஊழியர்களுக்கு இவர்மீது ஆத்திரம் ஏற்பட்டது. கடைநிலை ஊழியர்கள் பலர் மருத்துவரைச் சூழ்ந்துகொண்டு வசை மாரி பொழிந்து அவரைத் தாக்கியதாகவும் புகார் எழுந்தது. மருத்துவமனைத் தலைவர் அவ்விடத்துக்குச் சென்று மருத்துவரைச் சமாதானப்படுத்தி அவரை அனுப்பி வைத்தார். டாக்டர் ஜெய குமாரை அனுப்பி வைத்தவுடன் நிலைய மருத்துவ அலுவலரின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட நான்கு கடைநிலை ஊழியர்களிடம் அவர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டனர் என்று வாய்மொழியாக மருத்துவமனைத் தலைவர் தெரிவித்தார். பிறகு 26—1—1973-ல் எழுத்து மூலமாக இதுகுறித்து ஆணை பிறப்பித்தார். அதன் பிறகு ஹவுஸ் சர்ஜன்கள் இரவில் கூடி, வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தனர்.

இவ்வளவு விளக்கம் அவசியமில்லை என்றாலும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததற்காக இந்த விளக்கத்தைத் தெரிவித்தேன். டாக்டர் தன் கடமையைச் செய்தார். ஆனால் ஊழியர்களில் ஒருவர் மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சைப் பெற உரிமை இல்லையா, அதைக் கேட்க எங்களுக்கு உரிமை இல்லையா என்று எழுப்பியப் பிரச்சனையின் காரணமாக இந்தத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் இதைக் காரண மாகக் கொண்டு, ஹவுஸ் சர்ஜன்களும், டாக்டர்களும் வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டார்கள். டீன் அவர்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்டும், அவர்கள் வேலை நிறுத்தத்தை கைவிடவில்லை. அதனால் நோயாளிகள் பாதிக்கப்பட்டனர். நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருக்க, அவர்கள் மீது அனுதாபம் கொண்டு, டீன் அவர்கள் மேற் கொண்டு நடவடிக்கை எடுத்தார். தற்காலிகமாக சம்பந்தப் பட்டவர்கள் நீக்கம் செய்யப்பட்டதாக அறிவித்தார். அந்த நட வடிக்கை திருப்தி அளிக்காததால் வேலை நிறுத்தம் தொடர்ந்தது.

1973 பிப்ரவரி 12] [திரு. க. அன்பழகன்]

ஆகவே, இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உடனடியாக இங்கிருந்து துணை இயக்குநர் அவர்களும், இயக்குநர் அவர்களும் சென்று, அவர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து, வேலை நிறுத்தத்தை கைவிடும்படி திரும்பத் திரும்ப வலியுறுத்தியும், ஒரு வாரத்திற்குள் விசாரணை செய்து முடிவெடுப்பதாகத் தெரிவித்தும் அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினர். சுமார் 2,000 நோயாளிகள் இருக்கக்கூடிய ஒரு மருத்துவ மனையில் இப்படி ஒரு தகராறு எழுந்ததால், அந்த நோயாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதிலே போராட்ட உணர்ச்சியோ அல்லது பலாத்கார உணர்ச்சியோ அவர்களிடம் இல்லாமலிருந்தாலும், சம்பந்தப்பட்ட கடைநிலை ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களை நீக்கம் செய்யவேண்டுமென்று கோரினர். இறுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த நான்கு கடைநிலை ஊழியர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதிலே அரசாங்கத்தினால் தாமதம் எதுவும் ஏற்படவில்லை. இப்படி அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதிலே டாக்டர்களும், மற்றவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் டாக்டர்கள் பணியை ஒரு எமர்ஜன்ஸி பணியாகக் கருதுகிறது. ஏனென்றால் டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் பல்லாயிரக் கணக்கான நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தருவார்களானால் டாக்டர்கள் பணியை "எமர்ஜென்ஸி சர்வீஸ்" ஆக டிக்ளேர் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. நோயாளிகள் எந்தவகையிலும் பாதிக்கப் படக்கூடாது. அந்த நல்லெண்ணத்தோடு அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருக்கிறது. அதற்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி, அதற்கான அனுமதியை மறுக்கிறேன்.